# EWS முதல் Delimitation வரை - யார் பாதிக்கப்பட்டார்கள்?

இன்றிலிருந்து சரியாக 8 வருடம் பின்னோக்கி 2019 ஜனவரி 9 போனால் ஒரு வரலாற்று துரோகம் நடந்தது.

**1. 2019 EWS Bill – யார் யார் கைகோர்த்தார்கள்?**

மோடி அரசு கொண்டு வந்த "பொருளாதாரத்தில் பின்தங்கிய உயர்சாதியினருக்கு 10% இட ஒதுக்கீடு" மசோதா.

வாக்களிப்பு விபரம்:

- மொத்த ஆதரவு: 323
- எதிர்ப்பு: 3 மட்டுமே
- காங்கிரஸ், கம்யூனிஸ்ட், பிற கட்சிகள் அனைத்தும் "வரவேற்கிறோம்" என்று சொல்லி ஆதரித்தன.

காரணம் என்ன?

2019 தேர்தல் நெருக்கடி. பொதுப்பிரிவு வாக்குகள் கைவிட்டு போய்விடக்கூடாது என்ற பயம். அதனால் பாஜகவோடு ஒண்ணா மண்ணா நின்றார்கள்.

**2. EWS–னால் பிற்படுத்தப்பட்ட / தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏற்பட்ட இழப்பு:**

EWS வந்த பிறகு மொத்த இடஒதுக்கீடு 49.5% ல இருந்து 59.5% ஆக உயர்ந்தது.

**ஆனா உண்மையான பாதிப்பு என்ன?**

1. பொது போட்டி - 50.5% ல இருந்து 40.5% ஆக குறைந்தது.

அதாவது SC, ST, BC, MBC மாணவர்கள் திறமையின் அடிப்படையில் போட்டியிட்டு வந்த 10% சீட்டுகள் பறிபோனது.

2. வருமான வரம்பு: ஆண்டுக்கு 8 லட்சம்.

கிராமத்துல 5 ஏக்கர் நிலம் வச்சிருக்கிற ஒரு பணக்காரரும் EWS சர்டிபிகேட் வாங்க முடியும். ஆனா BC குடும்பத்தில் முதல் தலைமுறை பட்டதாரி அவதிப்படுறான்.

3. இது சமூக நீதிக்கு எதிரானது. இடஒதுக்கீடுனா சமூக ரீதியா பின்தங்கியவர்களுக்கு. ஆனா EWS சாதியை பார்க்காம பொருளாதாரத்தை மட்டும் பார்த்தது.

**3. 2026 – இப்போதைய ஆபத்து: Delimitation – தொகுதி மறுவரையறை**

மக்கள் தொகை 2026 கணக்கெடுப்பின் அடிப்படையில் நாடாளுமன்ற தொகுதிகள் பிரிக்கப்பட்டால்,

- தமிழ்நாடு: மக்கள் தொகை கட்டுப்பாட்டால் தொகுதிகள் குறையலாம். இப்போது 39
- உத்திரபிரதேசம், பீகார்: மக்கள் தொகை கூடியதால் தொகுதிகள் கூடும்.

தென் மாநிலங்களின் நாடாளுமன்ற பலம் குறையும். மத்தியில் நிதி, திட்டம், கொள்கை முடிவு எடுக்கும் போது தமிழ்நாடு போன்ற மாநிலங்களின் குரல் ஓங்கி ஒலிக்காது. இது மாநில சுயாட்சிக்கு எதிரானது.



**சைதை சாதிக்**
தி.மு.க. செய்தித் தொடர்பாளர்

**4. தி.மு.க.வின் நிலைப்பாடு**

EWS வந்தப்போதே தி.மு.க. மட்டும்தான் நாடாளுமன்றத்தில் எதிர்த்து வாக்களித்தது. காரணம்: இது சமூக நீதிக்கு எதிரானது.

இன்று Delimitation விவகாரத்திலும் தி.மு.க.வின் நிலைப்பாடு தெளிவு: "மாநில உரிமை, கூட்டாட்சி தத்துவம்".

தி.மு.க. கூட்டணியில் இருந்து ஜெயிச்சிட்டு, இன்னொரு கூட்டணிக்கு ஓடி, இப்போ கையேந்தி நிக்கிறவங்க வந்து "தி.மு.க. என்ன முடிவு எடுக்கும்" னு கேக்குறது அரசியல் நேர்மையா?

EWS-ல் பிற்படுத்தப்பட்டவர்களின் 10% வாய்ப்பு பறிக்கப்பட்டது.

Delimitation-ல் தென் மாநிலங்களின் அரசியல் உரிமை பறிக்கப்படும்.

இரண்டுக்கும் எதிராக நின்ற ஒரே கட்சி தி.மு.க.



திருப்பூர் மாநகராட்சி 36வது வார்டு மாமன்ற உறுப்பினர், கல்வி நிலைக்குழுத் தலைவர் பெ.திவாகரன் ஏற்பாட்டில் கலை – கலாச்சார பாரம்பரிய அணி மாவட்டப் பொறுப்பாளர்கள் தமிழரசன், விக்கி, இளவரசன் மற்றும் மோகன் உள்பட 70க்கும் மேற்பட்ட த.வெ.க.வினர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர், தெற்கு சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் க.செல்வராஜ் முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைந்தனர். இதில் திருப்பூர் தெற்கு மாநகரச் செயலாளர் டிகேடி மு.நாகராஜன், மாவட்ட துணை செயலாளர் டிஜிட்டல் எஸ்.சேகர், பகுதி கழக பொறுப்பாளர்கள் – மாமன்ற உறுப்பினர் பி.ஆர்.செந்தில்குமார், க.ஈஸ்வரமூர்த்தி, தம்பி ப.குமாரசாமி, மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் ம.அசோக்குமார், 36வது வார்டு பொறுப்பாளர்கள் பி.எஸ்.பாண்டியன், தினேஷ்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# இனம், மொழி, பண்பாடு காத்தவர் நம் தலைவர்!

## தமிழ்நாடு நாளையொட்டி – முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு வலைதளப் பதிவு!

**சென்னை, ஜூலை 20-**

**தமிழ்நாடு நாள் இன்று தமிழ்நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிலையில், ஜூலை 18ஆம் தேதியை தமிழ்நாடு நாளாகவும், மெட்ராஸ் மாகாணத்திற்கு தமிழ்நாடு என பெயர் சூட்டியதும் தி.மு.க. அரசுதான் எனக் குறிப்பிட்டு முன்னாள் அமைச்சரும், திருச்சுழி சட்டமன்ற உறுப்பினருமான தங்கம் தென்னரசு பதிவிட்டுள்ளார்.**

முன்னதாக, தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய், நமது மாநிலத்திற்கு தமிழரின் தொன்மை, வரலாறு, பண்பாடு, மொழியுணர்வைப் போற்றும் வகையில் "தமிழ்நாடு" எனப் பெயர் சூட்ட தீர்மானம் இந்நாளில் நிறை வேற்றப்பட்டது. மெட்ராஸ் மாநில மாக உருவான நவம்பர் 1ஆம் நாளையும், 'தமிழ்நாடு' எனும் பெயர் சூட்ட பேரறிஞர் அண்ணா சட்டமன்றத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம் முன்மொழியப்பட்டு நிறைவேற்ற ப்பட்ட ஜூலை 18ஆம் நாளையும் இந்த அரசு கொண்டாடும் என எக்ஸ் சமூக வலைத்தளப்பக்கத்தில் பதிவிட்டிருந்தார்.

இந்நிலையில், இதற்கு பதிலளிக்கும் விதமாக முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு, எல்லாவற்றிற்கும் தி.மு.க.தான் காரணம் என்பீர்கள்; ஆனால் இதற்கு உண்மையிலேயே தி.மு.க. அரசுதான் காரணம். 'மெட்ராஸ் மாநிலம்' என்ற பெயரை 'தமிழ்நாடு' என மாற்றியதும், ஜூலை 18ஆம் தேதியை தமிழ்நாடு நாளாக அறிவித்ததும் தி.மு.க. அரசுதான் என்று தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக தனது எக்ஸ் சமூக வலைத்தளப்பத்தில் தங்கம் தென்னரசு பதிவிட்டுள்ளதாவது:-

"இந்த இரண்டையுமே செய்தது தி.மு.க. அரசுதான். தமிழ்நாடு நாள் ஜூலை 18 அன்று கொண்டாடப்படுவதற்குக் காரணம் என்ன?

நவம்பர் 1ஆம் தேதியைத் தமிழ்நாடு நாளாகக் கொண்டாடுவது பொருத்தமற்றது என்று பல்வேறு அறிஞர்கள் அரசுக்குக் கோரிக்கை விடுத்தனர்.

மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட நாளான நவம்பர் 1ஆம் தேதியைத் தமிழ்நாடு நாளாக எவ்வாறு கொண்டாட முடியும்? அந்த நாளில், மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட போது தமிழ்நாடு பெற்றதைவிட இழந்ததே அதிகம். எனவே, அந்த நாளைத் தமிழ்நாடு நாளாகக் கொண்டாடுவது சரியல்ல என்று அவர்கள் வலியுறுத்தினர்.

மேலும், அன்னைத் தமிழ்நாட்டிற்கு "தமிழ்நாடு" என்ற பெயரைச் சூட்டுவதற்காகத் தியாகி சங்கரலிங்கனார் உயிர்நீத்ததும், எண்ணற்றோர் போராடியதும் வரலாறு. "பெயரில் என்ன இருக்கிறது?" என்று தமிழினத்திற்கான தனித்துவமான அடையாளத்தை வழங்க மறுத்த ஆதிக்க மனப்போக்கிற்கு எதிராகப் போராடி, ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பேரறிஞர் அண்ணா தலைமையிலான திமுக அரசுதான் இந்த மாநிலத்திற்கு "தமிழ்நாடு" என்ற பெயரைச் சூட்டியது.

அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நாளைத் தமிழ்நாடு நாளாகக் கொண்டாடுவது தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்க்கும் என்று கருதிய முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், ஜூலை 18ஆம் தேதியைத் தமிழ்நாடு நாளாகக் கொண்டாட ஆணையிட்டார்.

அதே நேரத்தில், தமிழ்நாட்டின் எல்லைகளைக் காக்க இன்னுயிர் நீத்துப் போராடிய தியாகிகளைப் போற்றும் வகையில் நவம்பர் 1ஆம் தேதியை "எல்லைப் போராட்டத் தியாகிகள் நாள்" என அறிவித்ததுடன், அவர்களுக்கான ஓய்வூதியத்தையும் உயர்த்தினார். இனம், மொழி, பண்பாடு காத்தவர் நம் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

இவ்வாறு அப்பதிவில், தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ. குறிப்பிட்டுள்ளார்.

## 'நீட்' தேர்வு தகுதி மதிப்பெண் கடுமையாக உயர்ந்ததால்

# மாணவர்களின் மருத்துவக் கனவுக்கு பெரும் பின்னடைவு!

*சென்னை, ஜூலை 20-*

தேசிய அளவில் நீட் தேர்வு தகுதி மதிப்பெண்கள் கடுமையாக உயர்ந்ததால் கிராமப்புற மாணவர்களின் மருத்துவ சேர்க்கை வாய்ப்புகளுக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

மருத்துவப் படிப்புக்கான இளநிலை நீட் தேர்வு தகுதி கட்-ஆஃப் மதிப்பெண்கள் இதுவரை இல்லாத வகையில் இந்த ஆண்டு வரலாறு காணாத உயர்வைச் சந்தித்துள்ளன. இந்த திடீர் மதிப்பெண் உயர்வு காரணமாக, மருத்துவக் கனவோடு இருக்கும் கிராமப்புற மற்றும் அரசுப் பள்ளி மாணவர்கள் தங்களின் சேர்க்கை வாய்ப்புகளை இழந்து மனதளவில் கடுமையாகப் பாதிக்கப்பட்டு விடும் அபாயம் ஏற்பட்டு உள்ளது.

இந்த ஆண்டு வெளியாகியுள்ள தகுதி மதிப்பெண் விவரங்கள் பிரிவுகள் வாரியாக பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக, பொதுப்பிரிவு மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய உயர் சாதி ஏழைகளுக்கான கட்-ஆஃப் மதிப்பெண் இந்த ஆண்டு 213 ஆக உயர்ந்துள்ளது. நீட் தேர்வு எழுதிய இந்த பிரிவில் 60 சதவீதத்திற்கும் அதிகமானோர் கட்-ஆஃப் மதிப்பெண்களைப் பெற்றுத் தேர்ச்சி அடைந்துள்ளனர்.

அதே நேரத்தில், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (ஓபிசி), பட்டியலினத்தவர் எஸ்சி) மற்றும் பழங்குடியின (எஸ்டி) பிரிவு மாணவர்களுக்கான தகுதி கட் ஆப் மதிப்பெண்கள் கடந்த ஆண்டில் 113 ஆக இருந்த நிலையில், இந்த ஆண்டு 177 ஆக அதிகரித்துள்ளது.

ஒரே ஆண்டில் இந்த பின்தங்கிய பிரிவு மாணவர்களுக்கான கட்-ஆஃப் மதிப்பெண் 64 வரை உயர்ந்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த திடீர் உயர்வு. போதிய பயிற்சி வசதிகள் இல்லாத கிராமப்புற மாணவர்களுக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தும். மேலும், இந்த ஆண்டு தேர்வு எழுதியவர்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கை கணிசமாக அதிகரித்த போதிலும், கடுமையான கட்-ஆஃப் உயர்வால் தகுதி பெற்றவர்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கை கடந்த ஆண்டை விட 1.11 லட்சம் என்ற அளவில் குறைந்துள்ளது.

தமிழகத்தின் நிலவரத்தைப் பொறுத்தவரை, பல்வேறு குளறுபடிகளுக்கு மத்தியில் நீட் மறுதேர்வு எழுதத் தகுதியான மாணவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. ஆனால், மறுதேர்வு எழுத விண்ணப்பித்தவர்களில் 23 சதவீதம் பேர் இந்தத் தேர்வை எழுத முன்வரவில்லை என்ற தகவல் வெளியாகி யுள்ளது.

இத்தகைய தேசிய அளவிலான கட்-ஆஃப் மதிப்பெண்களின் அசுர வளர்ச்சி காரணமாக, நடப்பு கல்வியாண்டில் தமிழ் நாட்டில் மருத்துவப் படிப்புகளில் சேர்வதற்கான மாநில கட்-ஆஃப் மதிப்பெண்களும் கணிசமாக உயரக் கூடும். அதன்படி, தமிழகத்தில் அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் இடங்களைப் பெறுவதற்கான மாநில கட்- ஆஃப் மதிப்பெண் மேலும் 40 மதிப்பெண்கள் வரை உயரக் கூடும் என்று மருத்துவக் கல்வி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# தமிழ்நாட்டில் இடைத்தேர்தல் இப்போது கிடையாது!

## தலைமை தேர்தல் ஆணையர் திட்டவட்டம்!

*புதுடெல்லி, ஜூலை 20-*

தமிழ்நாட்டில் இடைத்தேர்தல் இப்போதைக்கு கிடையாது என்று தலைமை தேர்தல் ஆணையர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் சார்பில் இரண்டு நாள் மாநாடு டெல்லியில் நடைபெற்றது. முதல் நாள் கூட்டத்தில் பல்வேறு முக்கிய ஆலோசனைகள், அதாவது தேர்தல் நடைபெறும் விதிமுறைகள் உட்பட அனைத்து தொடர்பாகவும் ஆலோசனை நடத்தப்பட்டது.

தமிழ்நாட்டில் காலியாக இருக்கும் தொகுதிகளுக்கு எப்போது இடைத்தேர்தல் நடத்தப்படும் என்று செய்தியாளர்கள் தரப்பில் இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதில் அளித்த இந்திய தலைமை தேர்தல் ஆணையர், தமிழ்நாட்டில் காலியாக இருக்கும் தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்துவது தொடர்பாக தற்போது எந்தவித ஆலோசனையும் மேற்கொள்ள வில்லை என்று தெரிவித்தார். தமிழ்நாட்டில் காலியாக இருக்கும் தொகுதிகள் தொடர்பாக தேர்தல் வழக்குகள் அனைத்தும் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால், அதனை கருத்தில் கொள்ள வேண்டிய சூழ்நிலை இருப்பதாகவும் தலைமைத் தேர்தல் ஆணையர் கூறினார்.

## "கடவுளுக்கே பாதுகாப்பு இல்லாத த.வெ.க. ஆட்சி"!

# திருத்தணி அருகே அம்மன் கழுத்திலிருந்த 10 சவரன் தாலி பட்டப்பகலில் கொள்ளை!

## சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துவிட்டதாக பொதுமக்கள் வேதனை!

*திருவள்ளூர், ஜூலை 20-*

திருவள்ளூர்மாவட்டம் திருத்தணி அருகே உள்ள ஆர்.கே.பேட்டை ஒன்றியத்திற்குட்பட்ட அய்யனேரி கிராமத்தில் அமைந்துள்ள பழமையான திரௌபதி அம்மன் திருக்கோயிலில், அம்மன் சிலையின் கழுத்தில் அணிவிக்கப்பட்டிருந்தசுமார்10சவரன் தங்கத் தாலியை மர்ம நபர்கள் பட்டப்பகலில் திருடிச் சென்ற சம்பவம் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

அய்யனேரி கிராமத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. இக்கிராமத்தின் முக்கிய ஆன்மிகத் தலமாக விளங்கும் திரௌபதி அம்மன் கோயிலில் நாளை நடைபெறவுள்ளதீமிதிதிருவிழாவையொட்டி, அம்மன் மற்றும் பரிவார தெய்வங்களின் சிலைகள் பக்தர்கள் தரிசிப்பதற்காக கோயில்வளாகத்தில்அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தன.

பக்தர்கள் வழிபாடு செய்து சென்ற பின்னர், சிறிதுநேரம்கழித்துகோயில் நிர்வாகிகள் வழக்கமான பணிக்காக சன்னதிக்குள் சென்றபோது, அம்மன் கழுத்தில் அணிவிக்கப்பட்டிருந்த 10 சவரன் தங்கத் தாலிகாணாமல்போனதை கண்டு அதிர்ச்சியடைந்தனர். உடனடியாக ஆர்.கே.பேட்டை காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற போலீசார், கைரேகை நிபுணர்கள் மற்றும் மோப்பநாய் உதவியுடன் தீவிர விசாரணை மேற்கொண்டனர். கோயில் வளாகத்தில் இருந்த தடயங்களை சேகரித்து, அருகிலுள்ள பகுதிகளில் உள்ள கண்காணிப்பு கேமராக்களின்பதிவுகளையும் ஆய்வு செய்து வருகின்றனர். தீமிதிதிருவிழாவுக்கு முந்தைய நாளே இந்த துணிச்சலானதிருட்டுநடந்திருப்பதுபக்தர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச்சம்பவம்தொடர்பாக வழக்குப்பதிவு செய்துள்ள போலீசார், விசாரணைநடத்திவருகிறார்கள்

இந்தச் சம்பவத்தை அடுத்து, "த.வெ.க. ஆட்சியில் மக்கள் மட்டுமல்ல, கோயிலில்உள்ளகடவுளுக்குக் கூட பாதுகாப்பு இல்லாத நிலை உருவாகிவிட்டதா?" என்ற கேள்வியை பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் எழுப்புவதாக குற்றம்சாட்டுகின்றனர்.பக்தர்களின் நம்பிக்கையின் சின்னமாக விளங்கும் ஆலயங்களில்கூட பாதுகாப்பு உறுதிசெய்யமுடியாதஅளவுக்குசட்டம்-ஒழுங்குசீர்குலைந்துள்ளதாகவும், குற்றவாளிகளுக்கு அச்சமே இல்லாத சூழல் நிலவுவதாகவும் அவர்கள் விமர்சிக்கின்றனர்.

மேலும், இந்தக் குற்றத்தில் ஈடுபட்டவர்களை உடனடியாக கைது செய்து,கோயில்களின்பாதுகாப்பை பலப்படுத்த அரசு நடவடிக்கைஎடுக்கவேண்டும் என்றும், இல்லையெனில் இதுபோன்றசம்பவங்கள் மீண்டும் மீண்டும் நடைபெறும் அபாயம் இருப்பதாகவும் வலியுறுத்தியுள்ளனர்.

## சென்னை கிழக்கு மாவட்ட துணைச் செயலாளர்

# தேவஜவகர் மாமனார் மறைவு!

## பி.கே.சேகர்பாபு - காசி முத்துமாணிக்கம் - ப.ரங்கநாதன் - கழகத்தினர் அஞ்சலி!

*சென்னை, ஜூலை 20-*

சென்னை கிழக்கு மாவட்ட கழக துணை செயலாளர் தேவஜவகர் மாமனாரும், ஓய்வு பெற்ற காவல் உதவி ஆய்வாளர் டி.அமிர்தவேல் அவர்கள் நேற்று (18.07.2026 - சனிக்கிழமை) காலை 3.00 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்ததும் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கழக வர்த்தகர் அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.ரங்கநாதன், மாவட்ட, பகுதி, வட்டக் கழகச் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர் வலம் நேற்று (19.07.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை, அன்னாரின் இல்லம் கொளத்தூர், ஜி.கே.எம். காலனி, 38 வது தெருவில் இருந்து புறப்பட்டு கொளத்தூர், ஜம்புலிங்கம் மெயின் ரோடு, ஜி.கே.எம். காலனியில் உள்ள இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.



## 'இரண்டாம் வகுப்பு பயணிகள்' என்ற பிரயோகத்தை மாற்றவேண்டும்!

# இரயில்வே துறைக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு!

## 'அரசியலமைப்பின் உணர்வுக்கு எதிரானது' எனக் கருத்து!

*புதுடெல்லி, ஜூலை 20-*

இரண்டாம் வகுப்பு பயணிகள் என்ற பிரயோகத்தை மாற்ற வேண்டும் என்று ரயில்வே துறைக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இது அரசியலமைப்பின் உணர்வுக்கு எதிரானது என்று கூறியுள்ளது.

ரயில்வே விபத்து தொடர்பான வழக்கு ஒன்று உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகள் சஞ்சய் கரோல், கோடீஸ்வர் சிங் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, ரயில் நிலையங்களில் நிலவும் அதிகப்படியான கூட்டத்தை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இதுவும் விபத்துக்களுக்கு காரணமாக உள்ளதாக நீதிபதிகள் குறிப்பிட்டனர்.

பின்னர், இரண்டாம் வகுப்பு பயணி என்று குறிப்பிட்டதை சுட்டிக்காட்டிய நீதிபதிகள், இது பயணக் கட்டணம் தொடர்புடையது என்றாலும் அரசியலமைப்பு உணர்வுகளுக்கு முரணானதாக உள்ளதாக கூறினர். எனவே இரண்டாம் வகுப்பு பயணி என்று குறிப்பிடக்கூடாது என்று தெரிவித்தனர். உயர்வகுப்பு, கீழ் வகுப்பு பயணிகள், இரண்டாம் வகுப்பு பயணிகள் என்று ரயில்வே துறை பயணிகளை குறிப்பிடுவதை கைவிட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ரயில்களில் 2ஆம் வகுப்பு என்ற வார்த்தையை மாற்ற வேண்டும் - உச்சநீதிமன்றம் ரயில்வே விபத்து தொடர்பான வழக்கு ஒன்று உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகள் சஞ்சய் கரோல், கோடீஸ்வர் சிங் அமர்வில் விசாரணைக்கு வந்தது

ரயில் நிலையங்களில் நிலவும் அதிகப்படியான கூட்டத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - நீதிபதிகள் ரயில் நிலையங்களில் கூட்டம் அதிகரிப்பதும் விபத்துகளுக்குக் காரணமாக உள்ளது - நீதிபதிகள் இரண்டாம் வகுப்பு பயணி என்று குறிப்பிடுவது அரசியலமைப்பு உணர்வுகளுக்கு முரணானதாக உள்ளது இரண்டாம் வகுப்பு பயணி என்று குறிப்பிடக்கூடாது - நீதிபதிகள் உயர்வகுப்பு, கீழ் வகுப்பு பயணிகள், இரண்டாம் வகுப்புப் பயணிகள் என்று ரயில்வே துறை பயணிகளை குறிப்பிடுவதைக் கைவிட வேண்டும்